குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஒசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 55/2022

அ.சா. 1

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. நாராயணப்பா |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.சூடப்பா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873-**ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது**. 21.05.2024**

**(**எதிரி ஆஜர்**)**

முதல் விசாரணை **:**

1) நான் தற்போது பலவனபள்ளியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு விபத்து சம்பவத்தில் இறந்துபோன திரு.வசந்த் குமார் என்னுடைய மகன் ஆவார். ஆஜர் எதிரியைத் தெரியும். என்ன தேதி, மாதம் ஞாபகம் இல்லை, சுமார் 4 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் விடியகாலை 04.00 மணியளவில் பசுவேசுவரர் கோவில் அருகே கட்டப்பட்டிருந்த மாடு இறந்துவிட்டது. அந்த இறந்துபோன மாட்டை டிராக்டரில் ஏற்றிவிட்டு ஆஜர் எதிரி டிராக்டரை நியூட்ரலில் நிறுத்திவிட்டு இறங்கிவிட்டார். அப்போது எனது மகன் பசுவேசுவரர் கோவில் சுவற்றில் சாய்ந்து நின்று கொண்டிருந்தார். அப்போது நியூட்ரலில் இருந்த டிராக்டர் பின்னோக்கி வந்து கோவில் சுவற்றில் நின்றுகொண்டிருந்த எனது மகன் திரு.வசந்த் குமார் மீது மோதிவிட்டது. அதில் என் மகனின் இடது பக்க நெஞ்சு, இடது பக்க காதில் ரத்தம் வந்தது. பிறகு ஒசூர் காவேரி மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம்.

2) அங்கு சென்று மருத்துவர் பரிசோதித்து அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தார். பின்னர் எனது மகனின் உடலை ஒசூர் அரசு மருத்துவமனைக்கு வைத்துவிட்டு புகார் கொடுப்பதற்காக பாகலூர் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். மேற்படி விபத்து ஏற்படுத்திய டிராக்டர் பதிவு எண் எனக்குத் தெரியாது. எனக்கு படிப்பறிவு கிடையாது. மேற்படி விபத்து ஏற்படுத்திய டிராக்டரின் டிரைலர் வெங்கடேசபுரத்தைச் சேர்ந்த நாகராஜனுக்கு சொந்தமானது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(**மேற்படி நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவானது அ**.**சா**.**ஆ**.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**)**. வழக்கு சம்பந்தமாக காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

முதல் விசாரணை முடிக்கப்படுகிறது**.**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை **:**

1) எனது முதல் விசாரணை சாட்சியத்தில் தெரிவித்த விவரங்களைத்தான் காவல் துறையினரிடம் வாக்குமூலமாக அளித்தேன் என்றால் சரிதான். எனக்கு தமிழ் மொழியில் எழுதப்படிக்கத் தெரியாது என்றால் சரிதான். அ.சா.ஆ-1 புகார் மனுவினை பாகலூர் காவல்நிலையத்தில் அளித்த சமயத்தில் என்னுடன் பட்டியல் சாட்சி 2 முதல் பட்டியல் சாட்சி 10 வரையிலான நபர்கள் வந்திருந்தனர் என்றால் சரிதான். இவ்வழக்கு பட்டியல் சாட்சி 2 முதல் 10 வரையிலான நபர்கள் எனது ஊர்க்காரர்கள் என்றால் சரிதான். அ.சா.ஆ.1 ல் என்ன விவரம் எழுதப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியாது. வழக்கு விபத்து சம்பவத்தில் தொடர்புடைய டிராக்டர் வாகனமானது அச்சமயத்தில் எந்த நபராலும் ஓட்டப்படவில்லையென்றாலும், அது இயக்கப்படாமல் நியூட்ரலில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தபோதுதான் இவ்வழக்கு விபத்து சம்பவமானது ஏற்பட்டது என்றால் சரிதான்.

2) வழக்குச் சம்பவ தினமன்று எவ்வளவு நேரம் கழித்து மேற்படி வழக்குச் சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்றால், அன்றைய தினம் நான் புகார் அளிக்கவில்லை, அச்சமயத்தில் நான் சம்பவ இடத்தில்தான் இருந்தேன். அ.சா.ஆ.1 -ல் என்னிடம் கையெழுத்து பெறுவதற்கு முன்பே, அதில் விவரங்கள் எழுதப்பட்டிருந்தது. அ.சா.ஆ.1 - புகார்மனுவில் உள்ள விவரங்களை காவல் துறையினர் எழுதினர், அதில் நான் கையெழுத்திட்டேன். சம்பவ தினமன்று காலை 10.00 மணியளவில் காவல் நிலையத்திற்குச் சென்றேன். அ.சா.ஆ.1 புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள விவரங்களுக்கு மாறாக எனது முதல் விசாரணை சாட்சியத்தில் விவரங்களை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு

விபத்துச் சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ-1 புகார் மனுவில் வழக்கு விபத்துச் சம்பவத்தில் தொடர்புடைய டிராக்டர் வானத்தினை திரு.ஸ்ரீகாந்த் த/பெ.அப்பையா என்பவர் வழக்கு விபத்து சம்பவத்தில் தொடர்புடைய டிராக்டர் வாகனத்தை நிறுத்தியிருந்ததாக தெரிவித்துவிட்டு தற்போது மாறாக ஆஜர் எதிரிதான் மேற்படி வாகனத்தை நிறுத்திச் சென்றதாக மாற்றி சாட்சியமளிக்கிறேன் என்றால் அது குறித்து எனக்குத் தெரியாது. வழக்கு விபத்து சம்பவத்தில் இறந்துபோன எனது மகனின் காப்பீட்டுத்தொகை பெறுவதற்கு வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் வழக்கு விபத்துச் சம்பவத்திற்கும் தொடர்பில்லையென்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு
தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன்
சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு
சரியென ஒப்புக்கொண்டார்

ஒம்/-வ.அகவிதன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,
ஒசூர்.

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 55/2022

அ.சா. 2

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. அஸ்வத் நாராயணன் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.எர்ரஜப்பா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 60 |

The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition.

**1873-**ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது**. 21.05.2024**

**(**எதிரி ஆஜர்**)**

முதல் விசாரணை **:**

1) நான் பலவனபள்ளியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் ஆஜர் எதிரியைத் தெரியும். வழக்கு விபத்து இறந்துபோன திரு.வசந்த் குமார் அ.சா.1 ன் மகன் என்று தெரியும். கடந்த 06.08.2020 ம் தேதி ஒரு நாள் விடியகாலை 04.30 மணியளவில் எனக்குச் சொந்தமான மாடு பசுவேசுவரர் கோவில் அருகே கட்டப்பட்டிருந்தது. அது உடல்நிலைய சரியில்லாத காரணத்தனால் இறந்துவிட்டது. அந்த இறந்துபோன மாட்டை JCB மூலம் டிராக்டரில் ஏற்றிவிட்டு ஆஜர் எதிரி டிராக்டரை நியூட்ரலில் நிறுத்திவிட்டு இறங்கிவிட்டார். அப்போது அ.சா.1-ன் மகன் பசுவேசுவரர் கோவில் சுவற்றில் சாய்ந்து நின்று கொண்டிருந்தார். அப்போது நியூட்ரலில் இருந்த டிராக்டர் பின்னோக்கி வந்து கோவில் சுவற்றில் நின்றுகொண்டிருந்த அ.சா.1ன் மகன் திரு.வசந்த் குமார் மீது மோதிவிட்டது. அதில் திரு.வசந்த் குமாரின் இடது பக்க நெஞ்சு, இடது பக்க காதில் ரத்தம் வந்தது. பிறகு நானும் அ.சா.1 ம் அங்கிருந்த காரில் ஒசூர் காவேரி மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம்.

2) அங்கு சென்று மருத்துவர் பரிசோதித்து அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தார். பின்னர் அ.சா.1-ன் மகனின் உடலை ஒசூர் அரசு மருத்துவமனையில் வைத்துவிட்டு அ.சா.1 புகார் கொடுப்பதற்காக பாகலூர் காவல் நிலையம் சென்றுவிட்டார். நான் வீட்டிற்குச் சென்றுவிட்டேன். வழக்கு சம்பந்தமாக காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

<u>முதல் விசாரணை முடிக்கப்படுகிறது.</u>

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1) எனது முதல் விசாரணை சாட்சியத்தில் தெரிவித்த விவரங்களைத்தான் காவல் துறையினரிடம் வாக்குமூலமாக அளித்தேன் என்றால் சரிதான். எனக்கு தமிழ் மொழியில் எழுதப்படிக்கத் தெரியாது என்றால் சரிதான். வழக்கு விபத்து சம்பவத்தில் தொடர்புடைய டிராக்டர் வாகனமானது அச்சமயத்தில் எந்த நபராலும் ஓட்டப்படவில்லையென்றாலும், அது இயக்கப்படாமல் நியூட்ரலில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தபோதுதான் இவ்வழக்கு விபத்து சம்பவமானது ஏற்பட்டது என்றால் சரிதான்.

2) வழக்குச் சம்பவத்தின்போது சம்பவ இடமானது ஓரளவு இருட்டாக இருந்தது என்றால் சரியல்ல, அச்சமயத்தில் தெளிவாக வெளிச்சம் இருந்தது. இவ்வழக்கு பட்டியல் சாட்சிகள் 1, 3 முதல் 10 வரையிலான நபர்கள் எனது ஊர்க்காரர்கள் மற்றும் தெரிந்தவர்கள் என்றால் சரிதான். அ.சா.ஆ.1 -புகார் மனுவினை காவல் நிலையத்தில் அளித்த சமயத்தில் நான் அ.சா.1-டன் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை. காவல் துறையினர் என்னை இரண்டு - மூன்று முறை இவ்வழக்கு சம்பந்தமாக விசாரித்தனர்.

2) இவ்வழக்கு விபத்துச் சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ-1 புகார் மனுவில் வழக்கு விபத்துச் சம்பவத்தில் தொடர்புடைய டிராக்டர் வானத்தினை திரு.ஸ்ரீகாந்த் த/பெ.அப்பைய்யா என்பவர் வழக்கு விபத்து சம்பவத்தில் தொடர்புடைய டிராக்டர் வாகனத்தை நிறுத்தியிருந்ததாக தெரிவித்துவிட்டு தற்போது மாறாக ஆஜர் எதிரிதான் மேற்படி வாகனத்தை நிறுத்திச் சென்றதாக மாற்றி அ.சா.1 சாட்சியமளித்துள்ளார் என்றால் அது குறித்து எனக்குத் தெரியாது. வழக்கு விபத்து சம்பவத்தில் இறந்துபோன அ.சா.1-ன் மகனின் காப்பீட்டுத்தொகை பெறுவதற்கு வேண்டி அவருக்குச் சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும்

வழக்கு விபத்துச் சம்பவத்திற்கும் தொடர்பில்லையென்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு
சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி
சாட்சியால் படிக்கப்பட்டு சரியென
ஒப்புக்கொண்டார்

ஒம்/-வ.அகவிதன்,
குற்றையியல் நீதித்துறை நடுவர் எண்.1,
ஒசூர்.

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்
(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 55/2022

அ.சா. 3

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. மல்லேஸ் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.சின்னப்பா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 28 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873-**ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது**. 21.05.2024**

**(**எதிரி ஆஜர்**)**

முதல் விசாரணை **:**

1) நான் பலவனபள்ளியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் ஆஜர் எதிரியைத் தெரியும். வழக்கு விபத்து இறந்துபோன திரு.வசந்த் குமார் அ.சா.1 ன் மகன் என்று தெரியும். கடந்த 06.08.2020 ம் தேதி ஒரு நாள் காலை 06.00 மணியளவில் ஆஜர் எதிரி டிராக்டரை நியூட்ரலில் நிறுத்திவிட்டு இறங்கிவிட்டார். அப்போது அ.சா.1-ன் மகன் பசுவேசுவரர் கோவில் சுவற்றில் சாய்ந்து நின்று கொண்டிருந்தார். அப்போது நியூட்ரலில் இருந்த டிராக்டர் பின்னோக்கி வந்து கோவில் சுவற்றில் நின்றுகொண்டிருந்த அ.சா.1 ன் மகன் திரு.வசந்த் குமார் மீது மோதிவிட்டது. அதில் திரு.வசந்த் குமாரின் இடது பக்க நெஞ்சு, இடது பக்க காதில் ரத்தம் வந்தது. பிறகு நானும் அ.சா.1 ம் அங்கிருந்த காரில் ஒசூர் காவேரி மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம்.

2) அங்கு சென்று மருத்துவர் பரிசோதித்து அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தார். பின்னர் அ.சா.1-ன் மகனின் உடலை ஒசூர் அரசு மருத்துவமனையில் வைத்துவிட்டு அ.சா.1 புகார் கொடுப்பதற்காக பாகலூர் காவல் நிலையம் சென்றுவிட்டார். நான் வீட்டிற்குச் சென்றுவிட்டேன். வழக்கு சம்பந்தமாக காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

முதல் விசாரணை முடிக்கப்படுகிறது.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

1) எனது முதல் விசாரணை சாட்சியத்தில் தெரிவித்த விவரங்களைத்தான் காவல் துறையினரிடம் வாக்குமூலமாக அளித்தேன் என்றால் சரிதான். வழக்குச்சம்பவ தினமன்று சம்பவ இடத்திற்கு காலை 05.45 மணியளவில் வந்தடைந்தேன். வழக்கு விபத்து சம்பவத்தில் தொடர்புடைய டிராக்டர் வாகனமானது அச்சமயத்தில் எந்த நபராலும் ஓட்டப்படவில்லையென்றாலும், அது இயக்கப்படாமல் நியூட்ரலில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தபோதுதான் இவ்வழக்கு விபத்து சம்பவமானது ஏற்பட்டது என்றால் சரிதான்.

2) இவ்வழக்கு பட்டியல் சாட்சிகள் 1, 2, 4 முதல் 10 வரையிலான நபர்கள் எனது ஊர்க்காரர்கள் மற்றும் தெரிந்தவர்கள் என்றால் சரிதான். அ.சா.ஆ.1 -புகார் மனுவினை காவல் நிலையத்தில் அளித்த சமயத்தில் நான் அ.சா.1-டன் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை. இவ்வழக்கு விபத்துச் சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ-1 புகார் மனுவில் வழக்கு விபத்துச் சம்பவத்தில் தொடர்புடைய டிராக்டர் வானத்தினை திரு.ஸ்ரீகாந்த் த/பெ.அப்பைய்யா என்பவர் வழக்கு விபத்து சம்பவத்தில் தொடர்புடைய டிராக்டர் வாகனத்தை நிறுத்தியிருந்ததாக தெரிவித்துவிட்டு தற்போது மாறாக ஆஜர் எதிரிதான் மேற்படி வாகனத்தை நிறுத்திச் சென்றதாக மாற்றி அ.சா.1 சாட்சியமளித்துள்ளார் என்றால் அது குறித்து எனக்குத் தெரியாது. வழக்கு விபத்து சம்பவத்தில் இறந்துபோன அ.சா.1-ன் மகனின் காப்பீட்டுத்தொகை பெறுவதற்கு வேண்டி அவருக்குச் சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் வழக்கு விபத்துச் சம்பவத்திற்கும் தொடர்பில்லையென்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு
சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி
சாட்சியால் படிக்கப்பட்டு சரியென
ஒப்புக்கொண்டார்

ஒம்/-வ.அகவிதன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,
ஒசூர்.

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 55/2022

அ.சா. 4

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. சிவசங்கரன் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.ஆண்டியப்பன் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 27 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873-**ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது**. 21.05.2024**

**(**எதிரி ஆஜர்**)**

முதல் விசாரணை **:**

1) நான் பெல்லேரியில் குடியிருந்து JCB *டிரைவராக* வேலை செய்து வருகிறேன். கடந்த 06.08.2020 ம் தேதி ஒரு நாள் காலை 04.30 மணியளவில் அ.சா.2 திரு.அஸ்வத் நாராயணா தனக்கு சொந்தமான மாடு இறந்துவிட்டதாகவும் மேற்படி மாட்டினை டிராக்டரில் ஏற்றுவதற்கு வேண்டி எனது JCB வாகனத்தை எடுத்துவருமாறு எனக்கு தகவல் தெரிவித்திருந்தார். அதனடிப்படையில் அன்றைய தினம் காலை 06.00 மணியளவில் மேற்படி பசுவஸ்வரர் கோவில் அருகில் இறந்து போன மாட்டை ஆஜர் எதிரியின் டிராக்டரில் ஏற்றவிட்டு சென்றுவிட்டேன். பின்னர் பகல் சுமார் 01.00 மணியளவில் அந்த ஊரைச் சேர்ந்த சிறுவன் மீது டிராக்டர் மோதி விபத்து ஏற்பட்டு இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். வழக்கு சம்பந்தமாக காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

முதல் விசாரணை முடிக்கப்படுகிறது**.**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை **:**

1) எனது முதல் விசாரணை சாட்சியத்தில் தெரிவித்த விவரங்களைத்தான் காவல் துறையினரிடம் வாக்குமூலமாக அளித்தேன் என்றால் சரிதான். இவ்வழக்கு பட்டியல் சாட்சிகள் 1, 2, 3, 5 முதல் 10 வரையிலான நபர்கள் எனது ஊர்க்காரர்கள் மற்றும் தெரிந்தவர்கள் என்றால்

சரிதான். அ.சா.ஆ.1 -புகார் மனுவினை காவல் நிலையத்தில் அளித்த சமயத்தில் நான் அ.சா.1-டன் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை. வழக்கு விபத்துச் சம்பவம் குறித்த விவங்கள் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். சம்பவ தினமன்று காலை சுமார் 06.30 மணியளவில் வழக்கு விபத்துச் சம்பவத்தில் தொடர்புடைய டிராக்டர் வாகனத்தில் அ.சா.2 -ற்கு சொந்தமான இறந்துபோன மாட்டின் சடலத்தை ஏற்றிவைத்துவிட்டு, அவ்விடத்திலிருந்து சென்றுவிட்டேன்.

2) வழக்கு விபத்துச் சம்பவத்தின்போது மேற்படி டிராக்டர் வாகனமானது இயக்கப்படாமல் நியூட்ரலில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். இவ்வழக்கு விபத்துச் சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ-1 புகார் மனுவில் வழக்கு விபத்துச் சம்பவத்தில் தொடர்புடைய டிராக்டர் வானத்தினை திரு.ஸ்ரீகாந்த் த/பெ.அப்பையா என்பவர் வழக்கு விபத்து சம்பவத்தில் தொடர்புடைய டிராக்டர் வாகனத்தை நிறுத்தியிருந்ததாக தெரிவித்துவிட்டு தற்போது மாறாக ஆஜர் எதிரிதான் மேற்படி வாகனத்தை நிறுத்திச் சென்றதாக மாற்றி அ.சா.1 சாட்சியமளித்துள்ளார் என்றால் அது குறித்து எனக்குத் தெரியாது. வழக்கு விபத்து சம்பவத்தில் இறந்துபோன அ.சா.1-ன் மகனின் காப்பீட்டுத்தொகை பெறுவதற்கு வேண்டி அவருக்குச் சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் வழக்கு விபத்துச் சம்பவத்திற்கும் தொடர்பில்லையென்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு
சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி
சாட்சியால் படிக்கப்பட்டு சரியென
ஒப்புக்கொண்டார்

ஒம்/-வ.அகவிதன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,
ஒசூர்.

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 55/2022

அ.சா. 5

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு.சூடப்பா |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.பெரிய சூடப்பா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 50 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873-**ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது**. 21.05.2024**

**(**எதிரி ஆஜர்**)**

<u>முதல் விசாரணை :</u>

1) நான் பலவனபள்ளியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது சகோதரர் ஆவார். ஆஜர் எதிரியைத் தெரியும். வழக்கு விபத்து இறந்துபோன திரு.வசந்த் குமார் எனது சகோதரனின் மகன் ஆவார். சம்பவ இடத்திலிருந்து 1 கிலோ மீட்டர் தொலைவில் வசித்து வருகிறேன். தேதி மாதம் ஞாபகம் இல்லை கடந்த 4 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் காலை 06.30 மணியளவில் நான் வீட்டிலிருந்தபோது எங்கள் ஊரில் உள்ள பசுவேசுவரர் கோவில் அருகில் இறந்துபோன மாட்டை அங்கிருந்த ஆட்களால் டிராக்டிலில் ஏற்றமுடியாததால் JCB ன் மூலம் டிராக்டரில் ஏற்றியதாகவும் அப்போது மாட்டின் கால் சாய்ந்துவிட்டதால் அப்போது டிரைவர் இறங்கிச் சென்றுவிட்டதாகவும் தகவல் சொன்னார்கள். டிராக்டர் மோதியதில் அ.சா.1ன் மகன் திரு.வசந்த் குமாரின் இடது பக்க நெஞ்சு, இடது பக்க காதில் ரத்தம் வந்தது. பிறகு நானும் அ.சா.1ம் அங்கிருந்த காரில் ஓசூர் காவேரி மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம்.

2) அங்கு சென்று மருத்துவர் பரிசோதித்து அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தார். பின்னர் அ.சா.1-ன் மகனின் உடலை ஓசூர் அரசு மருத்துவமனையில்

வைத்திருந்தார்கள். அப்போது காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள்.

<u>முதல் விசாரணை முடிக்கப்படுகிறது.</u>

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1) எனது முதல் விசாரணை சாட்சியத்தில் தெரிவித்த விவரங்களைத்தான் காவல் துறையினரிடம் வாக்குமூலமாக அளித்தேன் என்றால் சரிதான். இவ்வழக்கு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4, 6 முதல் 10 வரையிலான நபர்கள் எனது ஊர்க்காரர்கள் மற்றும் தெரிந்தவர்கள் என்றால் சரிதான், அ.சா.1 எனது சகோதரர் ஆவார். வழக்கு விபத்து குறித்த விவரங்கள் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். அ.சா.ஆ.1 -புகார் மனுவினை காவல் நிலையத்தில் அளித்த சமயத்தில் நான் அ.சா.1-டன் காவல் நிலையத்திற்கு சென்றிருந்தேன், எங்களுடன் பட்டியல் சாட்சி 2 முதல் 4 மற்றும் 6 முதல் 10 வரையிலான நபர்கள் வந்திருந்தனர்.

2) இவ்வழக்கு விபத்துச் சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ-1 புகார் மனுவில் வழக்கு விபத்துச் சம்பவத்தில் தொடர்புடைய டிராக்டர் வானத்தினை திரு.ஸ்ரீகாந்த் த/பெ.அப்பைய்யா என்பவர் வழக்கு விபத்து சம்பவத்தில் தொடர்புடைய டிராக்டர் வாகனத்தை நிறுத்தியிருந்ததாக தெரிவித்துவிட்டு தற்போது மாறாக ஆஜர் எதிரிதான் மேற்படி வாகனத்தை நிறுத்திச் சென்றதாக மாற்றி அ.சா.1 சாட்சியமளித்துள்ளார் என்றால் அது குறித்து எனக்குத் தெரியாது. வழக்கு விபத்து சம்பவத்தில் இறந்துபோன எனது சகோதரர் அ.சா.1-ன் மகனின் காப்பீட்டுத்தொகை பெறுவதற்கு வேண்டி அவருக்குச் சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் வழக்கு விபத்துச் சம்பவத்திற்கும் தொடர்பில்லையென்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு
சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி
சாட்சியால் படிக்கப்பட்டு சரியென
ஒப்புக்கொண்டார்

ஒம்/-வ.அகவிதன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,
ஒசூர்.

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஒசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 55/2022

அ.சா. 6

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு.அமராவதி |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.சூடப்பா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 30 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873-**ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது**. 21.05.2024**

**(**எதிரி ஆஜர்**)**

<u>முதல் விசாரணை :</u>

1) நான் பலவனபள்ளியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மைத்துனர் ஆவார். ஆஜர் எதிரியைத் தெரியும். வழக்கு விபத்து இறந்துபோன திரு.வசந்த் குமார் எனது மைத்துனரின் மகன் ஆவார். சம்பவ இடத்திலிருந்து 1 கிலோ மீட்டர் தொலைவில் வசித்து வருகிறேன். தேதி மாதம் ஞாபகம் இல்லை கடந்த 4 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் காலை 06.30 மணியளவில் நான் வீட்டிலிருந்தபோது எங்கள் ஊரில் உள்ள பசுவேசுவரர் கோவில் அருகில் இறந்துபோன மாட்டை அங்கிருந்த ஆட்களால் டிராக்டிலில் ஏற்றமுடியாததால் JCB ன் மூலம் டிராக்டரில் ஏற்றியதாகவும் அப்போது மாட்டின் கால் சாய்ந்துவிட்டதால் அப்போது டிரைவர் இறங்கிச் சென்றுவிட்டதாகவும் தகவல் சொன்னார்கள். டிராக்டர் மோதியதில் எனது மைத்துனர் அ.சா.1ன் மகன் திரு.வசந்த் குமாரின் இடது பக்க நெஞ்சு, இடது பக்க காதில் ரத்தம் வந்தது. பிறகு நானும் அ.சா.1ம் அங்கிருந்த காரில் ஒசூர் காவேரி மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம்.

2) அங்கு சென்று மருத்துவர் பரிசோதித்து அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தார். பின்னர் அ.சா.1-ன் மகனின் உடலை ஒசூர் அரசு மருத்துவமனையில்

வைத்திருந்தார்கள். அப்போது காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள்.

முதல் விசாரணை முடிக்கப்படுகிறது.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

1) எனது முதல் விசாரணை சாட்சியத்தில் தெரிவித்த விவரங்களைத்தான் காவல் துறையினரிடம் வாக்குமூலமாக அளித்தேன் என்றால் சரிதான். இவ்வழக்கு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5, 7 முதல் 10 வரையிலான நபர்கள் எனது ஊர்க்காரர்கள் மற்றும் தெரிந்தவர்கள் என்றால் சரிதான், அ.சா.1 எனது மைத்துனர் ஆவார். வழக்கு விபத்து குறித்த விவரங்கள் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். அ.சா.ஆ.1 -புகார் மனுவினை காவல் நிலையத்தில் அளித்த சமயத்தில் நான் அ.சா.1-டன் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை.

2) வழக்கு விபத்து சம்பவத்தில் இறந்துபோன எனது மைத்துனரான அ.சா.1-ன் மகனின் காப்பீட்டுத்தொகை பெறுவதற்கு வேண்டி அவருக்குச் சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் வழக்கு விபத்துச் சம்பவத்திற்கும் தொடர்பில்லையென்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு
சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி
சாட்சியால் படிக்கப்பட்டு சரியென
ஒப்புக்கொண்டார்

ஓம்/-வ.அகவிதன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,
ஒசூர்.

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஒசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 55/2022

அ.சா. 7

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு.கோபால் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.பெரிய சூடப்பா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 44 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873-**ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது**. 21.05.2024**

**(**எதிரி ஆஜர்**)**

முதல் விசாரணை **:**

1) நான் பலவனபள்ளியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது சகோதரர் ஆவார். ஆஜர் எதிரியைத் தெரியும். வழக்கு விபத்து இறந்துபோன திரு.வசந்த் குமார் எனது சகோதரனின் மகன் ஆவார். சம்பவ இடத்திலிருந்து 1 கிலோ மீட்டர் தொலைவில் வசித்து வருகிறேன். தேதி மாதம் ஞாபகம் இல்லை கடந்த 4 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் காலை 06.30 மணியளவில் நான் வீட்டிலிருந்தபோது எங்கள் ஊரில் உள்ள பசுவேசுவரர் கோவில் அருகில் இறந்துபோன மாட்டை அங்கிருந்த ஆட்களால் டிராக்டிலில் ஏற்றமுடியாததால் JCB ன் மூலம் டிராக்டரில் ஏற்றியதாகவும் அப்போது மாட்டின் கால் சாய்ந்துவிட்டதால் அப்போது டிரைவர் இறங்கிச் சென்றுவிட்டதாகவும் தகவல் சொன்னார்கள். டிராக்டர் மோதியதில் அ.சா.1 ன் மகன் திரு.வசந்த் குமாரின் இடது பக்க நெஞ்சு, இடது பக்க காதில் ரத்தம் வந்தது. பிறகு நானும் அ.சா.1 ம் அங்கிருந்த காரில் ஒசூர் காவேரி மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம்.

2) அங்கு சென்று மருத்துவர் பரிசோதித்து அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தார். பின்னர் அ.சா.1-ன் மகனின் உடலை ஒசூர் அரசு மருத்துவமனையில்

வைத்திருந்தார்கள். அப்போது காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள்.

முதல் விசாரணை முடிக்கப்படுகிறது.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

1) எனது முதல் விசாரணை சாட்சியத்தில் தெரிவித்த விவரங்களைத்தான் காவல் துறையினரிடம் வாக்குமூலமாக அளித்தேன் என்றால் சரிதான். இவ்வழக்கு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6, 8 முதல் 10 வரையிலான நபர்கள் எனது ஊர்க்காரர்கள் மற்றும் தெரிந்தவர்கள் என்றால் சரிதான், அ.சா.1 எனது சகோதரர் ஆவார். வழக்கு விபத்து குறித்த விவரங்கள் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். அ.சா.ஆ.1 -புகார் மனுவினை காவல் நிலையத்தில் அளித்த சமயத்தில் நான் அ.சா.1-டன் காவல் நிலையத்திற்கு சென்றிருந்தேன்,

2) இவ்வழக்கு விபத்துச் சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ-1 புகார் மனுவில் வழக்கு விபத்துச் சம்பவத்தில் தொடர்புடைய டிராக்டர் வானத்தினை திரு.ஸ்ரீகாந்த் த/பெ.அப்பைய்யா என்பவர் வழக்கு விபத்து சம்பவத்தில் தொடர்புடைய டிராக்டர் வாகனத்தை நிறுத்தியிருந்ததாக தெரிவித்துவிட்டு தற்போது மாறாக ஆஜர் எதிரிதான் மேற்படி வாகனத்தை நிறுத்திச் சென்றதாக மாற்றி அ.சா.1 சாட்சியமளித்துள்ளார் என்றால் அது குறித்து எனக்குத் தெரியாது. வழக்கு விபத்து சம்பவத்தில் இறந்துபோன எனது சகோதரர் அ.சா.1-ன் மகனின் காப்பீட்டுத்தொகை பெறுவதற்கு வேண்டி அவருக்குச் சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் வழக்கு விபத்துச் சம்பவத்திற்கும் தொடர்பில்லையென்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு
சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி
சாட்சியால் படிக்கப்பட்டு சரியென
ஒப்புக்கொண்டார்

ஒம்/-வ.அகவிதன்,
குற்றைவியல் நீதித்துறை நடுவர் எண்.1,
ஒசூர்.

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஒசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 55/2022

அ.சா. 8

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு.முனிராஜ் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.பெரிய சூடப்பா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 42 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873-**ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது**. 21.05.2024**

**(**எதிரி ஆஜர்**)**

முதல் விசாரணை **:**

1) நான் பலவனபள்ளியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது சகோதரர் ஆவார். ஆஜர் எதிரியைத் தெரியும். வழக்கு விபத்து இறந்துபோன திரு.வசந்த் குமார் எனது சகோதரனின் மகன் ஆவார். சம்பவ இடத்திலிருந்து 1 கிலோ மீட்டர் தொலைவில் வசித்து வருகிறேன். தேதி மாதம் ஞாபகம் இல்லை கடந்த 4 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் காலை 06.30 மணியளவில் நான் வீட்டிலிருந்தபோது எங்கள் ஊரில் உள்ள பசுவேசுவரர் கோவில் அருகில் இறந்துபோன மாட்டை அங்கிருந்த ஆட்களால் டிராக்டிலில் ஏற்றமுடியாததால் JCB ன் மூலம் டிராக்டரில் ஏற்றியதாகவும் அப்போது மாட்டின் கால் சாய்ந்துவிட்டதால் அப்போது டிரைவர் இறங்கிச் சென்றுவிட்டதாகவும் தகவல் சொன்னார்கள். டிராக்டர் மோதியதில் அ.சா.1 ன் மகன் திரு.வசந்த் குமாரின் இடது பக்க நெஞ்சு, இடது பக்க காதில் ரத்தம் வந்தது. பிறகு நானும் அ.சா.1 ம் அங்கிருந்த காரில் ஒசூர் காவேரி மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம்.

2) அங்கு சென்று மருத்துவர் பரிசோதித்து அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தார். பின்னர் அ.சா.1-ன் மகனின் உடலை ஒசூர் அரசு மருத்துவமனையில்

வைத்திருந்தார்கள். அப்போது காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள்.

முதல் விசாரணை முடிக்கப்படுகிறது.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

1) எனது முதல் விசாரணை சாட்சியத்தில் தெரிவித்த விவரங்களைத்தான் காவல் துறையினரிடம் வாக்குமூலமாக அளித்தேன் என்றால் சரிதான். இவ்வழக்கு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7, 9 மற்றும் 10 வரையிலான நபர்கள் எனது ஊர்க்காரர்கள் மற்றும் தெரிந்தவர்கள் என்றால் சரிதான், அ.சா.1 எனது சகோதரர் ஆவார். வழக்கு விபத்து குறித்த விவரங்கள் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். அ.சா.ஆ.1 -புகார் மனுவினை காவல் நிலையத்தில் அளித்த சமயத்தில் நான் அ.சா.1-டன் காவல் நிலையத்திற்கு சென்றிருந்தேன். எங்களுடன் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7, 9 மற்றும் 10 வரையிலானவர்கள் வந்திருந்தனர்.

2) இவ்வழக்கு விபத்துச் சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ-1 புகார் மனுவில் வழக்கு விபத்துச் சம்பவத்தில் தொடர்புடைய டிராக்டர் வானத்தினை திரு.ஸ்ரீகாந்த் த/பெ.அப்பைய்யா என்பவர் வழக்கு விபத்து சம்பவத்தில் தொடர்புடைய டிராக்டர் வாகனத்தை நிறுத்தியிருந்ததாக தெரிவித்துவிட்டு தற்போது மாறாக ஆஜர் எதிரிதான் மேற்படி வாகனத்தை நிறுத்திச் சென்றதாக மாற்றி அ.சா.1 சாட்சியமளித்துள்ளார் என்றால் அது குறித்து எனக்குத் தெரியாது. வழக்கு விபத்து சம்பவத்தில் இறந்துபோன எனது சகோதரர் அ.சா.1-ன் மகனின் காப்பீட்டுத்தொகை பெறுவதற்கு வேண்டி அவருக்குச் சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் வழக்கு விபத்துச் சம்பவத்திற்கும் தொடர்பில்லையென்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு
சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி
சாட்சியால் படிக்கப்பட்டு சரியென
ஒப்புக்கொண்டார்

ஒம்/-வ.அகவிதன்,
குற்றைவியல் நீதித்துறை நடுவர் எண்.1,
ஒசூர்.

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 55/2022

அ.சா. 9

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு.ஆனந்த் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.மோட்டப்பா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 38 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873-**ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது**. 21.05.2024**

**(**எதிரி ஆஜர்**)**

முதல் விசாரணை **:**

1) நான் பலவனபள்ளியில் குடியிருந்து மளிகை கடை வைத்துள்ளேன். அ.சா.1 யைத் தெரியும். ஆஜர் எதிரியைத் தெரியும். தேதி, மாதம் மற்றும் வருடம் ஞாபகம் இல்லை. சுமார் 3 - 4 வருடத்திற்கு முன்பு அ.சா.1-ன் மகனிற்கு டிராக்டர் மூலமாக விபத்து ஏற்பட்டதாக தகவல் தெரிந்து பாகலூர் காவல் நிலையம் சென்றேன். அங்கு என்னிடம் வெள்ளைத்தாளில் காவல் துறையினர் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான் **(மேற்படி பார்வை மகஜரில் உள்ள 1 வது கையெழுத்தானது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. மேற்படி பார்வை மகஜரில் என்ன விவரம் எழுதப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியாது. காவல் துறையினர் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி சட்டப்படி **161** குவிமுச பிரிவின் கீழ் அளித்த வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்த காரணத்தினால் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு

குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

1) கடந்த 06.08.2020ம் தேதி காலை சுமார் 06.00 மணியளவில் நாராயணப்பா மகன் மீது டிராக்டர் மோதி விபத்து ஏற்பட்டு இறந்தது சம்பந்தமாக போலிசார் வழக்குப்பதிவு செய்து அன்றைய தினம் பகல் 13.00 மணியளவில் சம்பவ இடம் வந்து சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், மேற்படி பார்வை மகஜரில் நானும் திரு,லோகேஷ் என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம் என்று காவல் துறையினரின் விசாரணையின் போது வாக்குமூலம் அளித்துவிட்டு தற்போது எதிரிக்குச் சாதகமாக மாற்றி சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு
சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி
சாட்சியால் படிக்கப்பட்டு சரியென
ஒப்புக்கொண்டார்

ஒம்/-வ.அகவிதன்,
குற்றைவியல் நீதித்துறை நடுவர் எண்.1,
ஒசூர்.

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 55/2022

அ.சா. 10

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு.லோகேஷ் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.கொண்டசாமப்பா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 36 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873-**ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது**. 21.05.2024**

**(**எதிரி ஆஜர்**)**

முதல் விசாரணை **:**

1) நான் பலவனபள்ளியில் குடியிருந்து டிரைவராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 யைத் தெரியும். ஆஜர் எதிரியைத் தெரியும். தேதி, மாதம் மற்றும் வருடம் ஞாபகம் இல்லை. சுமார் 3 - 4 வருடத்திற்கு முன்பு அ.சா.1-ன் மகனிற்கு டிராக்டர் மூலமாக விபத்து ஏற்பட்டதாக தகவல் தெரிந்து பாகலூர் காவல் நிலையம் சென்றேன். அங்கு என்னிடம் வெள்ளைத்தாளில் காவல் துறையினர் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். **(மேற்படி பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்தானது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. மேற்படி பார்வை மகஜரில் என்ன விவரம் எழுதப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியாது. காவல் துறையினர் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி சட்டப்படி **161** குவிமுச பிரிவின் கீழ் அளித்த வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்த காரணத்தினால் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு

குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

1) கடந்த 06.08.2020 ம் தேதி காலை சுமார் 06.00 மணியளவில் நாராயணப்பா மகன் மீது டிராக்டர் மோதி விபத்து ஏற்பட்டு இறந்தது சம்பந்தமாக போலிசார் வழக்குப்பதிவு செய்து அன்றைய தினம் பகல் 13.00 மணியளவில் சம்பவ இடம் வந்து சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், மேற்படி பார்வை மகஜரில் நானும் திரு.ஆனந்த் என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம் என்று காவல் துறையினரின் விசாரணையின் போது வாக்குமூலம் அளித்துவிட்டு தற்போது எதிரிக்குச் சாதகமாக மாற்றி சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு
சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி
சாட்சியால் படிக்கப்பட்டு சரியென
ஒப்புக்கொண்டார்

ஒம்/-வ.அகவிதன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,
ஒசூர்.